# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101910

1. District : DVAC, Chennai PS: Headquarters Year: 2023 FIR No.: 7 Date: 7.11.2023
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 02.11.2023 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1500Hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 07.11.2023 Time : 0830Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 07.11.2023 Time : 0830Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Poonamallee 20km west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Office of the Urban Land Tax, Ambattur and Poonamallee range, Sannathi Street, Poonamallee, Chennai
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : E. Sekar (b) Father's/ Husband's Name : Ekambaram
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Retired Government Servant (g) Address : Old No159, New No90, Suchidanantham Street, Kusapet, Chennai-12
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) J. Tr. Isac Sub Inspector of survey Urban Land tax office, Ambattur & Poonamallee range Sannathi Street, Poonamallee

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay

GCP 240 34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 7/11/23.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 7.11.2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07.11.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 0935Hrs

Name: பெயர் S.SENTHILKUMAR
Rank: நிலை Inspector of Pl. No. எண் ...........
DVAC, SIC, Chen

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.7/2023 பிரிவு 7 ஊழல் தடுப்பு(திருத்த) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.7 ன் தொடர்ச்சிப பின்வருமாறு

புணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை, சிறப்பு புலனாய்வு குழு ஆய்வாளர் திரு.சு.செந்தில்குமார் ஆகிய நான் 07.11.2023ந் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியிலிருந்த போது சென்னை கொசப்பேட்டை பழைய எண்.159 புதிய எண்.90.சச்சிதானந்தம் தெருவை சேர்ந்த E.சேகர் என்பவர் எனது அலுவலகம் ஆஜராகி எழுத்து பூர்வமான புகார் ஒன்றை என்னிடம் அளித்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு அனுப்புநர், E.சேகர், த/பெ ஏகாம்பரம், பழைய எண் 159 புதிய எண் 90 சச்சிதானந்தம் தெரு, கொசப்பேட்டை, சென்னை– 12. பெருநர், காவல் ஆய்வாளர் அவர்கள், சிறப்பு புலனாய்வு பிரிவு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, ஆலந்தூர், சென்னை–16. ஐயா, நான் சென்னை கொசப்பேட்டை சச்சிதானந்தம் தெருவில் கதவு எண் 90ல் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தலைமைச் செயலகத்தில் அரசு வாகன ஓட்டுனராக பணியாற்றி கடந்த 2019ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். எனக்கு திருமுல்லைவாயில் கிராமம் சரஸ்வதி நகர் சர்வே எண் 389ல் சுமார் 1836 சதுர அடி இடம் உள்ளது. அதற்கு அரசால் வழங்கப்பட்ட பட்டா உள்ளது. என் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.4218. கடந்த 2009ஆம் ஆண்டு 10X20 என்ற அளவில் வீடு கட்டி வாடகைக்கு விட்டிருந்தேன். அந்த வீட்டிற்கு மின் இணைப்பு வாங்கியுள்ளேன். மின் இணைப்பு எண் 055-133-3682. அந்த இடத்தின் மதிப்பு சுமார் ரூ.40,00,000/- ஆகும். அந்த இடத்தை விற்பனை செய்ய முயலும் போது அதற்கு கம்ப்யூட்டர் பட்டா தேவைப்பட்டது. கம்ப்யூட்டர் பட்டா பெறுவதற்காக திருமுல்லைவாயில் கிராம நிர்வாக அலுவலரை நேரில் சென்று பார்த்த போது அவர் ஆவணங்களை பார்வையிட்டு அந்த இடம் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் அரசு கையகப்படுத்தியுள்ளது. நீங்கள் இது தொடர்பாக உதவி ஆணையர் நகர்புர நிலவரி அலுவலகம் அம்பத்தூர் & பூந்தமல்லி கோட்டம் அவர்களை அணுகி தங்களுடைய கோரிக்கை மனுவை அளிக்க அறிவுறுத்தினார். அதன் பேரில் கடந்த 04.10.2023 அன்று நான் என்னுடைய கோரிக்கை மனுவுடன் ஆவணங்களை இணைத்து பூந்தமல்லி சன்னதி தெருவில் உள்ள நகர்புற நிலவரி அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு பணியில் இருந்த அலுவலக கண்காணிப்பாளர் என்னிடம் சார் ஆய்வாளர் நில அளவை திரு.ஐசக் என்பவரிடம் மனுவை கொடுக்க சொன்னதன் பேரில் நானும் சார் ஆய்வாளர் நில அளவை திரு.ஐசக் அவர்களிடம் என்னுடைய மனுவை சமர்ப்பித்தேன். பின்னர் இது தொடர்பாக கடந்த 02.11.2023 அன்று மாலை சுமார் 03.00 மணியளவில் பூந்தமல்லி நகர்புற நிலவரி அலுவலகத்தில் சார் ஆய்வாளர் நில அளவை திரு.ஐசக் அவர்களை நேரில் சந்தித்து கேட்ட போது அவருடைய மேசையில் காணப்பட்ட கோப்பு எண்.1129/2023 நாள் 06.10.2023 என குறிப்பிட்டிருந்ததை கையில் எடுத்து என்னிடம் காட்டி நீங்கள் A/Cக்குரூபாய்.30000/-

எனக்கு ரூபாய்.10,000/- ஆகமொத்தம் ரூபாய்.40,000/- லஞ்சமாக கொடுத்தால் தான் இந்த கோப்பினை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். அவரிடம் நான் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் மேலும் என்னுடைய மாத ஓய்வுதியத்தில் தான் என்னுடைய குடும்பத்தை நடத்தி வருகிறேன். என்னால் அவ்வளவு பெரிய தொகை தர இயலாது என்று கூறினேன். அதற்கு சார் ஆய்வாளர் நில அளவை திரு.ஐசக் அவர்கள் ஓய்வு பெற்ற அரசு ஊழியராக உள்ளதால் ரூபாய்.20,000-ஆவது லஞ்சமாக கொடுத்தால் மட்டுமே உங்கள் கோரிக்கை மனுவை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முடியும் என்று கறாராக கூறிவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத காரணத்தால் இந்த புகாரை தங்களிடம் கொடுக்கிறேன். என்னுடைய கோரிக்கை மனு அடங்கிய கோப்பினை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க என்னிடம் லஞ்சமாக ரூபாய்.20000 கேட்ட திரு.ஐசக் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு தகுந்த ஒத்துழைப்பு தருவேன் என்பதை தெரிவித்து கொள்கிறேன். இப்படிக்கு - sd - xxxx(07.11.2023)

sir,

Received this petition on 07.11.2023 at 08.30 hrs. and after getting permission from the superior officers, a quiet and discreet verification was made on the petition, I am registering a case in V&AC HQrs Crime No.7/2023, u/s.7 of Prevention of Corruption (Amendment ) Act, 2018 at 09.30hrs.

S.S. 7.11.2023

S.Senthilkumar,
Inspector of Police,
Special Investigation Cell,
vigilance and Anti-Corruption,
Chennai-16.